பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

STAFF COPY
NOT FOR SALE

இன்றைய அறிமுகம்
நாளைய நாகரீகம்
இறக்குமதி செய்யப்பட்ட
சாறிகள்,
றெடிமேட் ஆடைகளை
நவீன டிசைன்களில்
மனம் போல்
பெற்றுக்கொள்ள

சோபனா
ரெக்ஸ்ரைல்

16, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை
ரூபா 3/50

★ கூறைகள்
★ காஞ்சிபுரம்
★ பட்டு வேட்டி
★ பிளவுஸ் வகைகள்

மற்றும்

சுபமூர்த்த புடவைகளை
சுலபமே தெரிவுசெய்ய

சோபனா
ரெக்ஸ்ரைல்

16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 5 சுக்கில ஹூ மாசி மீ 16 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 02 (28-02-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 21

## ★ 48 மணிநேரத்தில் அரசபடைகள் முகாமுக்குள் முடங்கும்
## ★ திருமலை கோட்டை சிங்கள அகதிகள் அகற்றப்படுவர்
## ★ அம்பாறை, திருமலை புனர்வாழ்வு வேலைகள் நிறுத்தம்

# வடக்கு, கிழக்கு பாதுகாப்பு
# விடுதலைப் புலிகளின் வசம்!

## மட்டுநகர் சந்திப்பில் ஹமீத் உறுதி

— மட்டக்களப்பு செய்தியாளர்:- இரா. உதயகுமார் —

மட்டக்களப்பு. பெப்ரவரி, 28

★ வடக்கு, கிழக்கின் பாதுகாப்புப் பொறுப்புக்களை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப்படைப்பதற்கு முதற்கட்ட நடவடிக்கையாக இப் பகுதிகளில் உள்ள ஸ்ரீலங்கா அரச படையினர் அடுத்த 48 மணிநேரத்தினுள் முகாம்களுக்குள் முடக்கப்படுவார்கள்.

★ திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயம் அமைந்திருக்கும் 'பிரட்ரிக்'' கோட்டைக்குள் தங்கியிருக்கும் சகல சிங்கள அகதிகளும் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தப்படுவர்.

★ அம்பாறை, திருகோணமலை மாவட்டத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்ட வேலைகள் உடனடியாக நிறுத்தப்படும்,

— இப்படி நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் அரசாங்க பிரதிநிதியாகக் கலந்து கொண்ட உயர்கல்வி, விஞ்ஞான, தொழில்நுட்பத்துறை அமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீதுவுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போது இணக்கம் காணப்பட்டதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மூன்று விடயங்கள் சம்பந்தமாகவும் தான் ஜனாதிபதி திரு.ஆர். பிரேமதாஸாவோடு கலந்துரையாடிய பின்னர், சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு இது தொடர்பான பணிப்புரைகளை விடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாப். ஹமீத் புலிகள் பிரதிநிதிகளிடம் உறுதியளித்தார்.

நேற்றுக் காலை அமைச்சர் ஹமீத் விசேட விமானத்தில் மட்டக்களப்புக்கு வந்திறங்கியபோது அவரை விமான நிலையத்தில் வைத்து விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. யோகரட்ணம் யோகி, திரு. எஸ். கரிகாலன் ஆகியோர் வரவேற்றனர்.

பின்னர் அங்கிருந்து அமைச்சரை திரு. யோகி தமது காரில் விடுதலைப் புலிகளின் மட்டுநகர் பிராந்திய காரியாலயத்துக்கு அழைத்துச் சென்றார்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



எத்தினை ''லைன்'' குடுத்தாலும் உந்த கம்பிக் கள்ளர் ஒழிஞ்சாத் தான் பாருங்கோ நிம்மதி ....!

### சுப நேரம்

புதன்கிழமை மாசி 16
சுப நேரம்:
4 . 59 முதல் 6 .29 வரை
ராகுகாலம்
12 . 29 முதல் 1 . 59 வரை
கரி நாள்

## பனை அபிவிருத்தி சபைக்கு மர முந்திரிகைத் தோட்டம்

கொழும்பு, பெப். 28

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான ஆயிரம் ஏக்கர் தோட்டத்தை பனை அபிவிருத்திச் சபை பொறுப்பேற்றுள்ளது. பூநகரியில் இயங்கிவரும் இலங்கை மரமுந்திரிகை கூட்டுத் தாபனத்துக்கு சொந்தமான தோட்டமே இவ்வாறு பொறுப்பேற்கப்பட்டுள்ளது.

இக்காணியில் ஊடுபயிராக 50 ஆயிரம் பனங்கன்றுகளை நட பனை அபிவிருத்திச் சபை தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறது என அதன் தலைவர் திரு. கே. நடராஜா தெரிவித்தார்.

பனையும், மரமுந்திரிகையும்

(5ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் நகருக்கு மேலும் 40 தொலைபேசி இணைப்புகள்

யாழ் நகருக்கான தொலைத் தொடர்பு வசதியை விரிவுபடுத்தும் நோக்குடன் மேலும் 40 தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட இருக்கின்றன.

ஏற்கனவே யாழ் நகருக்கு நூறு தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன.

அதே சமயம் புதிய 40 இணைப்புக்களையும் வழங்குவதற்கு வசதியாக யாழ்-கொழும்பு நேரடி தொலைபேசிக்கு வழங்கப்பட்டிருந்த 20 இணைப்புக்களும் துண்டிக்கப்பட்டு அந்த இணைப்புக்கள் யாழ் தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையத்துக்கு இணைக்கப் படவிருக்கிறது. (ஓ-3)

## பிரபாவைச் சந்தித்ததாக நெடுமாறன் தகவல்

யாழ்ப்பாணம், பெப். 28

நான் எனது தற்போதைய விஜயத்தின்போது விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனையும் சந்தித்தேன். அவர் இன்னும் உறுதி குலையாதவராகவே இருக்கிறார்.

நேற்று உதயன் அலுவலகத்துக்கு விஜயம்செய்த தமிழ்நாடு பிரமுகரும் காந்தி காமராஜர் காங்கிரஸ் தலைவருமான திரு. பி. நெடுமாறன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த ஒருசில தினங்களாக யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளுக்கும் விஜயம்செய்து இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளை திரு. நெடுமாறன் பார்வையிட்டார்.

அவர் நேற்று உதயன் அலுவலகத்துக்கு வந்தபோது மேலும் தெரிவித்ததாவது:-

உலகில் ஐந்தாவது பெரிய

(5ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் வர்த்தகரிடம் கொள்ளை!

காலி, ஜின்தோட்டையிலுள்ள முஸ்லிம் வர்த்தகர் ஒருவரின் வீட்டிலிருந்து ரூபா 4½லட்சம் பெறுமதியான நகை, பணம் என்பன கடந்த திங்களன்று கொள்ளையிடப்பட்டன.

ஆயுதபாணிகள் சிலரே இக்கொள்ளையை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

## வசதிக் கட்டண ஆசிரியர் நிரந்தர நியமனம் பெறுவர்

யாழ்ப்பாணம், பெப். 28

நாடு முழுவதிலும் கடமையாற்றும் வசதிக்கட்டண ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படுவர்.

இதற்கான அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும்.

கடந்த ஜனவரி மாதம் 25ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றுநிருபம் ஒன்றின்படி நாட்டின்சகல பாடசாலைகளிலும் உள்ள வசதிக்கட்டண ஆசிரியர்கள்பற்றிய பெயர் விபரங்களை, கல்வி அமைச்சு மாகாண அரசுகள் ஊடாகக்

(6ஆம் பக்கம் பார்க்க)

## அ.தி.மு.க. தலைவர்களுக்கும் வாழப்பாடிக்கும் எதிராக வழக்கு

சென்னை, பெப் 28

அ. தி. மு. க. தலைவர்களும் முன்னாள் அமைச்சர்களுமான திரு. எஸ். டி. சோமசுந்தரம், திரு. ஆர். எம். வீரப்பன் திரு. முத்துச்சாமி ஆகியோர் மீதும் தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி மீதும் தமிழக அரசு குற்றவியல் வழக்குகளைத் தொடர இருப்பதாக அறிவித்துள்ளது.

ஜெயலலிதா விபத்துச் சம்பவத்தைத் தொடர்ந்து நாட்டில் சட்டம், ஒழுங்கு பரா

(6ஆம் பக்கம் பார்க்க)

## "தடங்கலுக்கு வருந்துகிறோம்" பேச்சுக்களின் நிலை இதுதான்!

### கலைஞர் முயற்சியின் மேலதிக விவரங்கள்

சென்னை, பெப். 28

இலங்கைத் தமிழர் குழுக்களுடன் நடத்திவந்த சமரசப் பேச்சுக்கள் தோல்வியில் முடிந்துவிட்டனவா?

இக்கேள்விக்குத் தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி பதிலளித்தார்.

செய்தியாளரிடம் கடந்த திங்கட்கிழமை கலைஞர் கருணாநிதி பேசினார். இப் பேச்சின் சில விபரங்கள் நேற்றைய உதயனில் வெளியாகி இருந்தது. கலைஞர் கூறிய மேலதிக விபரங்கள் வருமாறு:-

டெலிவிஷனில் நிகழ்ச்சி ஒன்று திடீரென்று நிறுத்தப்படுகிறது. 'தடங்கலுக்கு வருந்துகிறோம்' என்று கூறிவிட்டு மீண்டும் அந்த நிகழ்ச்சியை டெலிவிஷனில் ஒளிபரப்புகிறார்கள் அல்லவா? அப்படியான தடங்கல்தான் ஏற்பட்டுள்ளது.

விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இருந்தால் பேச்சுக்

(6ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் காங்கிரஸின் சென்னை விஜயம் தாமதம்!

முஸ்லிம் காங்கிரஸ் குழுவின் சென்னைவிஜயம் தாமதமாகும் எனக் காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

தற்பொழுது அரசியலில் ஏற்பட்டுவரும் திடீர் மாற்றங்கள் காரணமாகவே முஸ்லிம்காங்கிரஸ் சென்னை விஜயத்தை ஒத்திவைத்திருப்பதாக அவர் மேலும்கூறினார்.

தேவை ஏற்படும்போது— சாதகமான சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் காங்கிரஸ் குழு சென்னை சென்று முதலமைச்சர் திரு கருணாநிதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தும் என்றும் அவர் சொன்னார். (ஓ)

## தமிழகத்தில் பெரும் கலவரத்தை உருவாக்க அதிகாரிகள் முயற்சி!

### வீரமணி எச்சரிக்கை

சென்னை, பெப் 28

மார்ச் 31 ஆம் திகதிக்குள் பெரிய கலவரத்தையே தமிழகத்தில் உருவாக்கி விட சில அதிகாரிகள் முயல்கின்றனர்.

திராவிடர் கழகச் செயலாளர் கி. வீரமணி, இராமநாதபுரம் பொலீஸ் நிலையத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக அறிக்கை ஒன்றை விடுத்தார்.

அந்த அறிக்கையிலேயே முன்கண்டவாறு குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

இராமநாதபுரம் பொலீஸ் நிலையம் மீதான தாக்குதல் துவக்கம் தான்; முடிவு அல்ல.

இத்தாக்குதலுக்குப் பின்னால் உள்ள அதிகாரிகளது திட்டங்கள் பயங்கரமானவை. மார்ச் 31க்குள் பெரிய கலவரத்தையே உருவாக்க முனைந்துள்ளனர். ராமநாதபுரம் சம்பவம் வெறும் ஒத்திகையே.

எனவே தாமதமின்றி தமிழக அரசு புதுடில்லி அரசுக்கு தகவல் தெரிவித்து இந்த மூல பலத்தை முறியடித்து, ஈழத் தமிழர்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டவர்கள் இங்கே நுழைந்து தங்கள் கை வரிசையைக் காட்டிட இடம் தராமல், இங்கு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மாநிலத்தில் ஆயுதக் கடத்தலுக்கு பின்னணியில் உள்ள

(6ஆம் பக்கம் பார்க்க



வடக்கு - கிழக்கு மாகாணசபையின் கைத்தொழில் அமைச்சர் ஜனாப் அபுயூசுப் தலைமையில் ஈ. பி. ஆர். எல். எவ். குழு கடந்த திங்கள் சென்னையில் தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதியைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தியபோது எடுக்கப்பட்ட படம்.

படத்தில் ஜனாப் அபுயூசுப், அவைத் தலைவர் திரு. பொன்ராம் ராஜகாரியர், சபை உறுப்பினர்களான திருமதி ஜி. ஸ்ரீதரன், திரு. வி. ஏ. கந்தசாமி. இயக்க உறுப்பினரான திரு. கே. சாந்தன் முதலமைச்சர் கருணாநிதி, மத்திய அமைச்சர் மாறன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

## 5 மினிபஸ்கள் தடுத்து வைப்பு

யாழ்ப்பாணம், பெப் 28

அளவுக்குஅதிகமான பயணிகளை ஏற்றிச் சென்றதன் காரணமாக ஐந்து மினி பஸ்கள் தமிழீழ விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறைக்கும் பலாலி வீதியிலும் சேவையில் ஈடுபட்ட பஸ்களே தடுத்து வைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-9)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கலப்பில்லாத சுத்தமான 8மாத வயதுடைய அல்ஷேசன் ஆண் நாய் ஒன்று விற்பனைக்குண்டு. விலை பேசி தீர்மானிக்கலாம். விபரங்கட்கு சி. சிறீகரன், புகையிரதநிலைய வீதி, மல்லாகம். (2677)

---

பலவர்ணங்களில் லவ் பேட்ஸ் (Love Birds) விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். R.D. சிவகுரு, ஸ்ரேஷன் வீதி' சாவகச்சேரி. (2663)

---

Primary Travelling in English For Each ஆங்கிலத்தில் ஆரம்பப் பயணம் எனும் இந்நூல் அடிப்படையில் தெளிவு குன்றிய அனைவருக்கும் உகந்த வகையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். தொகுப்பு: T. R. Selvakumaran. (2671)

---

Hyline சேவல் பேட்டுக் குஞ்சு கைவசம் விற்பனைக்கு உண்டு இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: Lucky Farm House மதவடிஒழுங்கை திருநெல்வேலி. தொகையாகப் பெறுவோருக்கு சலுகையுண்டு. (11920)

### கோழிக்குஞ்சு விநியோகம்

3மாதம் நிறைவு செய்த Golden Comet பிறவுண் பேட்டுக் கோழிகள் விற்பனைக்குண்டு. சற்குணராஜா& பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (2657)

---

Hyline வெள்ளை' சிவப்பு, கறுப்பு பேட்டுக்குஞ்சுகள், Golden Comet பிறவுண் பேட்டுக்குஞ்சுகள், சேவற்குஞ்சுகள் Hisex பிறவுண் பேட்டுக்குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள், ஒவ்வொரு வாரமும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளவும். சற்குணராஜா& பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில் (2656)

### கோழிக்குஞ்சு விநியோகம் Uplands Farm

(Unsex) தனி சிகப்பு கறுப்பு நிற சேவல் பேடு (பிலிமத்), கறுப்பு வரிசேவல், (Dekalb) பிறவுண் பேடு, சேவல் (Cobb) புறொயிலர் குஞ்சுகள் (28-2-90) புதன் கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. இல. 9, கந்தையா ஒழுங்கை, சுன்னாகம் (புகையிரத நிலையத்துக்கு அருகில். (11850)

### தேவை

மனேஜர், சப்ளையர்கள் கோக்கி, கையாள், அரைப்பவர் உடன் எமது சைவ ஹோட்டலுக்குத் தேவை. தங்குமிட வசதியுண்டு. ஹோட்டல் வேலை அனுபவமுடையவர்கள்உடன் நேரில் வரவும். வெ. பக்கிர்சாமி ராஜாமணி ஹோட்டல் 375, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (2214)

---

எழுத்துக் கோர்ப்பாளர்கள் (கொம்போஸிட்டர்கள்) உடன்தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் நேரில் வரவும். செட்டியார் அச்சகம், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C/3923)

---

O/L வகுப்புக்கு சமூகக் கல்வி, தமிழ் படிப்பிப்பதற்கும், A/L வகுப்புகளுக்கு பூமி சாத்திரம் படிப்பிப்பதற்கும், ஆசிரியர்கள் தேவை நேரடியாக வந்து சந்திக்கவும். யாழ்ப்பாணக் கல்வி நிலையம், யாழ்ப்பாணம். (2669)

---

எமது ஸ்தாபனத்தில் ரெக்ரைல்ஸ் பிறின்ரிங் செய்வதற்குப் பெண்கள் தேவை. அருகாமையில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. நேரில் வரவும். வசந்தா ரெக்ஸ்ரைல்ஸ், 42, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். (2661)

### வீடு தேவை

அரச பணியில் உள்ள ஒரு குடும்பத்துக்கு அடிப்படை வசதிகள் கொண்ட வீடு ஒன்று குத்தகைக்கு அல்லது வாடகைக்குதேவை. நேரிலோ அல்லது கடித மூலமோ தொடர்பு கொள்க. ஸ்ரீகாந் புத்தகசாலை, 165, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்புறம் யாழ்ப்பாணம். (C/3898)

### தவறிவிட்டன

விக்னராசாவின் பாஸ் போட்டும், சங்கரப்பிள்ளை அதிசயமலரின் அடையாள அட்டையும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியலயத்திலோ அன்றி அன்னாரின் முகவரிக்கோ ஒப்படைக்கவும். (11881)

---

சரவணை மனோகரன் ஆகிய என்னுடைய 611702345 V எனும் இலக்கமுடைய அடையாள அட்டை சாவகச்சேரி பஸ் நிலையத்தில் காணாமல் போய் விட்டது. கண்டெடுப்பவர்கள் சரவணை மனோகரன் நாவற்குழி தெற்கு, கைதடி எனும் விலாசத்தில் தயவு செய்து ஒப்படைக்கவும். (2666)

### காஸ்குக்கர் திருத்த

உங்களுடைய GAS குக்கரில் பிழைகளா? இல்லையெனில் புதிய உதிரிப்பாகங்கள் மாற்றவேண்டுமா? எதுவாயினும் மிகத்திறமையான முறையில் குறித்ததவணையில் திருத்திக்கொடுக்கப்படும்- நீங்கள் நாடவேண்டிய இடம் Maleka Enterprise 309 Stanley, Road, Jaffna. (11919)

### போட்டோஸ்ரட்

யாழ் பஸ்நிலையத்தில் தங்களின் சகல ஆவணங்களையும் மிகவும் தெளிவாக போட்டோ ஸ்ரற்செய்து கொள்ளவும், ஆங்கில ரைப்பிங், மொழி பெயர்ப்புகளுக்கும் ஸ்ரீ காந் புத்தகசாலை, 165, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்புறம் யாழ்ப்பாணம் (C/3717)

---

தங்கள் சகல பத்திரங்களையும் மிகவும் தெளிவான முறையில் போட்டோஸ்ரற் செய்து கொள்ளவும், ஆங்கிலத் தட்டெழுத்து செய்து கொள்ளவும் வாணி வீடியோ ஹோம், கே. கே. எஸ். வீதி, வல்வெட்டித்துறை. (2588)

### றோனியோ

றோனியோ தட்டச்சு மற்றும் சகலஅச்சு வேலைகளும் குறித்த தவணையில் சிறந்த முறையில் செய்துகொள்ள தயா அச்சகம், 138 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (மனோகரா சந்தி) (C/3831)

### லண்டன் பரீட்சைகள்

10-12-89 இல் எமது நிலையத்தில் நடைபெற்ற பிற்மன் பரீட்சையின் சுருக்கெழுத்து தட்டெழுத்து மற்றும் பாடங்களின் பெறுபேறுகள் லண்டனிலிருந்து கிடைத்துள்ளது. 90 மே பரீட்சையின் விண்ணப்ப முடிவு 15-3-90 வெளி மாணவர்களும் தோற்றலாம் S. T. C. A. 149 (37), சிவன் பண்ணை வீதி, (ஈழநாடு நிறுவனத்தின் பின் வீதி), யாழ்ப்பாணம், கிளை நிறுவனங்கள் இல்லை. (2266)

### சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் எவ்வகையான பிரச்சினைகளையும் உன்னதமான மட்டக்களப்பு ஆரூட மாந்திரீகமுறைப்படி அரச அங்கீகாரம் பெற்றுள்ள பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரால் வெற்றிகரமாய் தீர்வு காணப்படும். தொடர்பு கொள்ளுங்கள்: ''சக்தி சரவணா 210, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். (யாழ் இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக) வியாழன் விடுமுறை. (2641)

### புத்தகம்

சித்திரக் கதைகள் (காமிக்ஸ்), முத்து, லயன், திகில், வெளியீடுகளும் மீண்டும் இந்திய சகல சஞ்சிகைகளும் வந்து விற்பனையாகிறது. பொக்கட் கலண்டர்களும், கண்ணதாசன் எழுதிய நூல்களும், எண்சோதிட புத்தகங்களும் ஏராளமாக வந்துள்ளன. பிரதிகளுக்கு முந்துங்கள். ராஜன் புத்தக சாலை, 12, பஸ்நிலையம் யாழ்ப்பாணம். (2596)

## பரீட்சைமண்டபம்

யாழ்ப்பாணம், பெப். 28

யாழ்- பல்கலைக்கழகத்தில் பரீட்சை மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

மூன்று மாடிகளைக் கொண்ட இக்கட்டடத்தின் வேலைகள் இவ்வருட இறுதிக்குள் பூர்த்தியாகும். எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## இலவச மாங்கன்றுகள்

கிளிநொச்சி பெப் 28

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு கிளிநொச்சி கல்வித் திணைக்களம் 500 மாங்கன்றுகளை இலவசமாக வழங்கியது.

விவசாய திணைக்களத்தில் இருந்து பெறப்பட்ட இந்த மாங்கன்றுகளை விவசாய கல்வி அதிகாரி திரு. தருமரத்தினம் பாடசாலைகளுக்கு வழங்கினார். (இ-76)

## நான்காண்டு நினைவலைகள்



**அமரர் சின்னத்தம்பி தாமோதரம்பிள்ளை**

(உரிமையாளர் தாமோதரா ஸ்டோர்ஸ்)

துளிர்வு: 14 - 08 - 1921 உதிர்வு: 13 - 03 - 1986

திதி: 28 — 02 — 1990

நான்காண்டுகள் சென்றும் இன்றும் நீங்கவில்லை துயரலைகள் ஆவிவிடுத்துப் போனபின்னும் ஆயிரமாய் கலங்குகின்றோம் எம் மன விளக்கின் ஒளி நீங்கள்.

குடும்பத்தினர்.

''சிவசுந்தரபதி''
நாவடி வடக்கு,
கொக்குவில்.

[சி-3919]

---

**91 A/L** விஞ்ஞான மாணவர்களுக்கு

★ பொறியியல் ★

ஆரம்பம்: நாளை 01-03-1990 வியாழன் 3.00 p.m

ஆசிரியர்: Mr. ரவிந்திரநாதன் B. Sc.

3rd, CROSS STREET, JAFFNA.

[சி-3922]

---

பிரயாணம் பிரயாணம் பிரயாணம்

## 'M' THREE TRAVEL

வழங்கும் உடனடிப் பிரயாணம்

★ சவூதி அரேபியா (Saudi Arabiy)

★ குவைற் (Kuwait) (ஆண்கள், பெண்கள்)

சவூதி அரேபியா (ஆண்கள் மட்டும்)

| | | வெற்றிடம் | சம்பளம் |
|---|---|---|---|
| 1. | Plumber | 5 | 650 SR |
| 2. | Suvage Treatment Technician (கழிவு நீர் சுத்திகரிக்கும் உத்தியோகத்தர்) | 3 | 750 SR |
| 3. | Pest Control Technician | 4 | 750 SR |
| 4 | Carpenters | 2 | 600 SR |
| 5. | Acc unts Cleark | 2 | 700 SR |
| 6. | Dispatches | 5 | 650 SR |
| 7. | Radio-T. V. Technician | 5 | 700 SR |
| 8. | First Aid man | 1 | 800 SR |
| 9. | House Driver | 6 | 600 SR |
| 10. | Driver's | | 1000 SR |

2. Kuwait (குவைற்)

School Cleaners (ஆண், பெண் இருபாலாருக்கும்) (விரைவில் பயணம்)

★ நம்பிக்கை ★ நாணயம்

என்பனவற்றிற்கு நீங்கள் நாடவேண்டிய தாபனம்

## 'M' THREE TRAVEL

தலைமை அலுவலகம்:
''இந்திர பவனம்''
சோதி வீதி,
காங்கேசன்துறை.

கிளை அலுவலகம்:
இல 1, 2வது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-3918]

---

## 6ஆம் மாத நினைவஞ்சலி



**திரு. ஐயம்பிள்ளை சின்னையா**

தோற்றம்: 16 - 05 - 1929 மறைவு: 02 - 09 - 1989

குடும்பத்தின் ஒளிவிளக்கே! பாசத்தின் பிறப்பிடமே! கருணையின் பெருங் கடலே! அயராது உழைத்து எம்மையெல்லாம் உயர வைத்த உத்தமரே! எங்களை ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்து விட்டீர்களே? எங்களை பிரிந்து சென்று ஆறுமாதம் சென்றிடினும் உங்கள் அன்பு மறக்க முடியாதையா! உடல், பொருள், ஆவி அத்தனையும் எங்களுக்காக அர்ப்பணித்த உங்களை நாங்கள் நினைவு கொள்கின்றோம்.

உங்களது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்:

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.**

இல. 443, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

[2676]

---

## PERSONAL CLASS

விசேட ஆங்கில மொழி வகுப்பு

Special English Course

✶ உயர்கல்வி ✶ தொழிற்கல்வி

பாடசாலை விலகிய மாணவர்களுக்குரியது.

ஆரம்பம்: 03 - 03 - 1990

மு.ப 8.30 — 10.30

**New Science Academy**

JAFFNA.

பி.ப. 3.00 — 5.00

**Science Academy**

NALLUR.

(சி/3926)

---

## கம்பியூட்டர் கல்வி

✶ Diploma in Data Processing and Computer Programming in BASIC Language

ஆரம்பம்: 02 Mar. 1990
(திங்கள், புதன், வெள்ளி வகுப்புக்கள்) 8. 30 a m

ஆரம்பம்: 03 Mar. 1990
(சனி, ஞாயிறு, வகுப்புக்கள்) 4 p m

✶ dBASE III +
ஆரம்பம்: 03 Mar. 1990 10.30 a.m.

✶ LOTUS 1 - 2 - 3
ஆரம்பம்: 03 Mar. 1990 9 a.m.

Practicals on IBM (Compatiable Machines)

O/L படித்த இரு பாலாரும் சேரலாம். மிகவும் விளக்கமான முறையில் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி முடிவில் பெறுமதிவாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும்.




**UNIKCO COMPUTER CENTRE**

No.5, Power House Road,
2nd Lane, Jaffna.

(/சி3928)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**திரு. நடராஜா விநாயகமூர்த்தி**

தோற்றம்: 07 - 05 - 1925 மறைவு: 29 - 01 - 1990

உங்கள் பிரிவால் துயருறும்

**தாய், மனைவி, பிள்ளைகள்.**

இலகடி, கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

[11918]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்தது இல்.

**பொருள்:**

பசுவிற்கு நீர் வேண்டும் என்று அறம் நோக்கி இரந்து கேட்டாலும் அந்த இரத்தலை விட நாவிற்கு இழிவானது மற்றொன்று இல்லை.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288
28- 02- 1990 த. பெ.இலக்கம் : 23

# நல்லதோர் அறிகுறி

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் கர்ப்பிணித் தாய்மாரின் இறப்புவிகிதம் குறைந்து வருகிறது.

வடபிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி என். கனகசபை இலங்கை குடும்பத் திட்டச் சங்கத்தின் கூட்டத்தில் பேசும் போது இதனைத் தெரிவித்தார்.

இந்த இரு மாவட்டங்களிலும் போஷாக்கின்மை காரணமாக 1988 ஆம் ஆண்டு 44 கர்ப்பிணித் தாய்மார்கள் இறந்துள்ளனர். இந்த எண்ணிக்கை கடந்த வருடம் 24 ஆகக் குறைந்தது.

ஒரு தசாப்தத்துக்கு முன் எடுக்கப்பட்ட ஒரு புள்ளி விவரக்கணக்கெடுப்பில் தெற்கு ஆசியாவிலேயே சராசரி சிசு மரணங்கள் குறைந்த இடம் இலங்கையின் வடபகுதி என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அதாவது யாழ்ப்பாணம் மாவட்டமே சராசரி சிசு மரணம் குறைந்த இடமாக அப்போது அறிவிக்கப்பட்டிருந்தது. கர்ப்பிணித் தாய்மார் இறப்பும் அப்போது குறைவாகவே இருந்தது.

ஆனால் கடந்த சில ஆண்டுகளில் இங்கு ஏற்பட்ட அனர்த்தங்கள் இந்த நிலையை ஓரளவு மாற்றி அமைத்திருந்தன. போதிய சிகிச்சை இன்மை, போஷாக்கின்மை வாகன வசதி இன்மை காரணமாக இறப்பு விகிதம் சிறிது அதிகரித்திருந்தது.

இந்த நிலைமை தற்போது மாறிவருவதை வடபிராந்திய சுகாதாரப் பணிப்பாளரின் தகவல் கோடு காட்டுகிறது.

கர்ப்பிணித் தாய்மார் மரணமாவதற்கு முக்கிய காரணம் அவர்களுக்குத் தேவையான போஷாக்குணவு மற்றும் வைத்திய ஆலோசனைகள் இல்லாததே.

தற்போது இப்பணியில் பல்வேறு தொண்டர் ஸ்தாபனங்கள் ஈடுபட்டு பெரும்பணி ஆற்றி வருகின்றன.

செஞ்சிலுவைச் சங்கம், றெட்பானா, சிறுவர் பாதுகாப்பு நிதியம். சர்வோதயம் போன்றவையும் மற்றும் நிவாரண ஸ்தாபனங்களும் பலவித உதவிகளையும் செய்து வருகின்றன. ஆரம்ப சுகாதார நிலையங்கள் பல இடங்களிலும் திறக்கப்பட்டு கர்ப்பிணித் தாய்மார்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன.

இந்த உதவிகள், போஷாக்குள்ள உணவுகள் இலவசமாக வழங்கப்படுகின்றன என்ற காரணத்துக்காக இவற்றை உதாசீனம் செய்யாது பயன்படுத்துவதன் மூலம் இறப்பு விகிதத்தைக் குறைக்க கர்ப்பிணித் தாய்மார்கள் உதவலாம்.

தற்போதைய முன்னேற்றமான சூழ்நிலையில் இந்த இறப்பு விகிதம் இந்த ஆண்டு மேலும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது ஒரு நல்ல அறிகுறியே.

## காரைநகர் மாணிக்கவாசகர் சபை

பண்டத்தரிப்பு பெப் 28

பொன் விழாவை ஒட்டி அகில இலங்கை ரீதியிலான கவிதை கட்டுரைப் போட்டிகளைகாரைநகர் மணிவாசகர் சபை நடத்த உள்ளது.

மார்ச்சில்நடத்தப்படவுள்ள இந்த பொன் விழாவில் அப்பிரதேசத்தில் சைவமும் தமிழும் வளர்க்கும் பெரியார்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

கவிதை கட்டுரைப் போட்டிகளுக்கு முதலாம் பரிசாக 1000 ரூபாவும் 2 ஆம் பரிசாக 500 ரூபாவும் 3 ஆம் பரிசாக 250 ரூபாவும் வழங்கப்படவுள்ளது. (இ-120)

## பயிற்சி நிலையம்

மாங்குளம், பெப் 28

முள்ளியவளை கிழக்கு ஜனசக்திக் குடும்பத்திலுள்ள படித்த இருபது மாணவிகளுக்கான தையல் பயிற்சி நிலையத்தை முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. வி. கந்தசாமி ஆரம்பித்து வைத்தார்.

இப் பயிற்சி முப்பது மாத காலம் நடைபெறும்.

ஜனசக்தித் திட்டத்தின் கீழ் ஜனசக்தி உதவிபெறும் குடும்பங்களினால் குமுளமுனையில் நாலு கிராமவீதிகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன. (இ-94)

## கற்சிலைமடுவில் அரிவு வெட்டு வைபவம்

ஒட்டுசுட்டான், பெப் 28

ஒட்டுசுட்டான் பகுதி கற்சிலைமடு கிராமத்தில் விவசாயிகளால் பண்டைக்கால முறைப்படி அரிவு வெட்டு' வைபவம் இடம் பெற்றது.

ஒட்டுசுட்டான் பிரதேச கலை, கலாசார ஒன்றியம் இதனை ஏற்பாடு செய்திருந்தது.

நூற்றுக்கணக்கான விவசாயிகள் இதில் கலந்து கொண்டனர்.

வைபவத்தில் சிறப்பு விருந்தினராக தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒட்டுசுட்டான் பிரதேச அரசியல் பொறுப்பாளர் திரு. வேணு மற்றும் சுதர்ஷன் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-113)

# உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு யாழ். மாவட்டத்தில் பற்றாக்குறை

யாழ்ப்பாணம், பெப் 28

யாழ் -மாவட்டத்தில்உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் உள்ள 484 பாடசாலைகளிலும் 52 உடற்பயிற்சி ஆசிரியர்களே கடமை புரிகிறார்கள்.

மாணவர்களுக்கு உடற்கல்வி முக்கியம் என அறிவிக்கப்பட்ட போதும் போதிய பயிற்சி ஆசிரியர்கள் இல்லாமையால் உரிய முறையில் இந்தக் கல்வியை மாணவர்களுக்கு அளிக்க முடியாதுள்ளது.

அதே நேரம் பயிற்சிக்கு சென்ற எட்டுப்பேர்விரைவில் யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கு நியமனமாக இருக்கின்றனர்.

பயிலுநர்ஆசிரியர் தெரிவில் கூட ஒருவர் கூட உடற்பயிற்சி ஆசிரியராக நியமிக்கப்படவில்லையே என்று கவலை தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## கிளிநொச்சி அறுவடை விழா

கிளிநொச்சி பெப் 28

கிளிநொச்சி விவசாய திணைக்களத்தினால்''அறுவடை விழா நடத்தப்பட்டது.

முரசு மோட்டையில் தொடர்புக் கமக்காரரும் விவசாய மன்னனுமான மு. சந்தசாமியின் மாதிரிப்பண்ணையில்விழா நடைபெற்றது.

கிளிநொச்சிமாவட்ட உதவி விவசாய பணிப்பாளர் திரு. ரி.ஏ. தம்பி அப்பா தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் விவசாய உத்தியோகஸ்தர் திரு. எஸ். பெரியசாமி, போதனாசிரியர் எஸ். நல்லதம்பி பாடவிதான உத்தியோகஸ்தர்கள் எஸ். தேவராசா ஆனந்த நடராசா ஆகியோர் உரை ஆற்றினார்கள். (இ 76)

## வேலை நிறுத்தம் இணக்கம் ஏற்பட்டது

குருநகர் பெப். 28

சம்பள உயர்வு கோரி யாழ் கடற்றொழில் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தத்தின் பின் இணக்கம் காணப்பட்டுள்ளது.

வேலை நிறுத்தத்தை அடுத்து ஊழியர் சங்கப் பிரதி நிதிகளுக்கும் நிர்வாக உத்தியோகத்தர்களுக்கும் கிடையேயான ஒரு சந்திப்பு நடந்தது.

அப்போது-ஒருமாதகால அவகாசத்தில் சம்பளஉயர்வு மற்றும் கோரிக்கைகள் தீர்க்கப்பட வேண்டும். என்றும் தீர்க்கப்படாவிட்டால் மீண்டும் நிர்வாகத்திற்கு எதிராகப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் அதுவரை சட்டப்படி வேலை செய்வதென்றும்'' இணக்கம் காணப்பட்டது (ஒ - 51)

## செயலற்ற மாகாண சபைகள் மீது அரசு நடவடிக்கை

கொழும்பு பெப். 28

மக்களுக்கு சரியான முறையில் சேவை செய்யாது ஒழுங்கற்ற நிலையில் இயங்கும் மாகாண சபைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க அரசு திர்மானித்துள்ளது.

தேவையான அதிகாரங்கள் மற்றும் நிதிவசதி இருந்தும் மாகாணசபைகள் சேவையாற்றாமல் இருப்பின் அவை கடும் நடவடிக்கைக் குள்ளாகும்.

இதற்காக மாகாண சபைகளின் செயற்பாடுகள் பற்றி மதிப்பீடு ஒன்றை அரசு நடத்தும் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ - எ)

### 782 விபத்துக்கள்

கொழும்பு பெப். 28

கொழும்பு மாநகரில் ஜனவரி மாதத்தில் தினமும் சராசரி 25 என்ற கணக்கில் மொத்தம் 782 வீதிவிபத்துக்கள் இடம் பெற்றன. என்று போக்குவரத்து பொலிஸ்பிரிவின் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது. [இ - எ]

## கணேசபுரப் பாலம் நிதி ஒதுக்கப்பட்டும் வேலை இன்னும் ஆரம்பமாகவில்லை

கிளிநொச்சி கரடிப்போக்கு கணேசபுரப் பாலத்துக்கு நிதி ஒதுக்கப்பட்டும் இதுவரை எவ்வித வேலையும் ஆரம்பிக்கப்படவில்லை.

இதேவேளை தென்னை மரத்தினால் போடப்பட்டிருந்த தற்காலிகப்பாலமும் சேதமடைந்து உடைந்து விழும் நிலையில் இருந்து வருகிறது.

இந்தப்பாலம் கிளிநொச்சி நகரப் பகுதியில் முக்கிய ஓர் இணைப்புப் பாலமாக இருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-76)

## மாசிமக இலட்சார்ச்சனை

யாழ்ப்பாணம், பெப் 28

தெல்லிப்பளை துர்க்கா தேவி மாசிமக இலட்சார்ச்சனை இன்று புதன்கிழமை ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 10தினங்களுக்கு இந்தஇலட்சார்ச்சனை நடைபெற்று எதிர்வரும் 10 ஆம் திகதி கலசாபிஷேகமும் நடைபெறும். (க-3)

# கடந்த காலங்களை நினைத்துப் பாருங்கள்

## ஈ. பி. ஆர். எல். எவ். க்கு புலிகள் பிரமுகர் பதில்

மட்டக்களப்பு, பெப். 28

ஈ. பி.ஆர்.எல்.எவ். எம். பிக்கள் நாடாளுமன்றத்தில் பேசுவதற்கு முன்னர் முதலில் கடந்த காலங்களில் தாங்கள் நடந்து கொண்ட விதம் பற்றி நினைத்துப் பார்த்த பின்னர் பேசுவது நல்லது.

—இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மட்டக்களப்பு, அம்பாறை அரசியல் பொறுப்பாளரும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதித்தலைவருமான திரு. எஸ். கரிகாலன் விடுத்த அறிக்கை ஒன்றில்தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகள் வரி அறவிடுவதாகவும், ஆயுதங்களுடன் நடமாடுவதாகவும் நாடாளுமன்றத்தில் ஈ. பி. ஆர். எல். எவ்வின் எம். பிக்கள் ஆற்றியதாகக் கூறப்படும் உரைக்கு பதிலளிக்கும் விதத்தில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

''அன்று அநீதியைப் பார்த்துக்கொண்டிருந்தவர்கள் இன்று எம்மீது தவறான குற்றச்சாட்டுக்களை சுமத்துகிறார்கள்.

எமக்கு ஒரே தலைமை, ஒரே நிர்வாக அமைப்பு ஒரே கொள்கை, ஒரே இலட்சியம் இது எமது மக்களுக்கு நன்கு தெரியும். எமக்கு இடத்துக்கு இடம் பிரதேசத்துக்கு பிரதேசம் வேறுபாடு இல்லை.

வரி அறவீடு, விடுதலைப் புலிகள் ஆயுதத்துடன் நடமாடுதல் ஆகியவை குறித்து மிகைப்படுத்திக் கூறும் இந்த எம்.பிக்கள்—

இப்போதுதான் எமது மக்கள் அமைதியுடன்,பீதியின்றி வாழும் நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை மறந்து விட்டார்கள்.

மேற்படி பிரதிநிதிகள் சார்ந்திருக்கும் அமைப்பு இந்தியப் படையின் உதவியுடன் எமது மக்கள் மத்தியில் நடத்திய அநீதி, அட்டூழிய செயல்களை இவர்கள் ஏன் அப்போது கண்டிக்கவில்லை; குரல் எழுப்பவில்லை.

இத்தகைய அநீதி செயல்களை அன்று ஆதரித்த அவர்கள் இன்று நீதி, நியாயம், அமைதி ஆகியவை குறித்துப் பேசுவது பொது மக்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கிறது. —என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-21)

## இன்னும் நீண்ட பயணம்தேவை

### இந்திய தொழிலாளர் பற்றி தொண்டா

கொழும்பு, பெப். 28

'.இந்தியப் பெரும் தோட்டத் தொழிலாளர்களில் சிலருக்கு பிரஜாவுரிமை கிடைத்தது உண்மையே ஆனால் அவர்கள் ''பூமி புத்திரர்'' களாகுவதற்கு இன்னும்நீண்ட பயணம் செய்யவேண்டி இருக்கிறது.''

கொழும்பு ஒபறோய் ஹோட்டலில் 26 ஆம் திகதி திங்கள்கிழமை நடைபெற்ற வைபவத்தில் உரை நிகழ்த்திய போது புடைவை, கிராமியக் கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் இவ்வாறு கூறினார்.

அமைச்சர் தொண்டமானின் 50 ஆண்டுகால பொது சேவையைப் பாராட்டி ஸ்ரீ லங்கா இந்தியர் சமூகத்தின் சபை இந்த வைபவத்தை ஒழுங்கு செய்திருந்தது.

அமைச்சர் தொண்டமான் மேலும் பேசுகையில், ''பிரஜாவுரிமை என்பது ஒரு மந்திரக் கோல் அல்ல. அதை காட்டி அரசியல், பொருளாதார. ஆத்மீக விடுதலையை அது ஏற்படுத்தியது. பெருந்தோட்ட இளைஞர்கள் இப்பொழுது தமது நிலையை ஒட்டி மென்மேலும் விரக்தி அடைகின்றார்கள். வேலையின்மை பெருகியுள்ளது. வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ளது. எதிர்காலம் இருண்டதாக இருக்கின்றது'' என்று கூறினார்.

## யாழ் மாநகரசபை எல்லைக்குள் அங்கீகாரமின்றி கட்டப்பட்ட கடைகளை அகற்ற ஏற்பாடு

யாழ். மாநகரசபைஎல்லைக்குள் அங்கீகாரம் இன்றி கட்டப்பட்ட கடைகள் கட்டடங்களை அகற்றுவதற்கு யாழ் மாநகரசபை நடவடிக்கை எடுக்கவுள்ளது.

மாநகரசபையின் அங்கீகாரம் இல்லாமல் யாழ் நகர் பகுதியில் பல கடைகள் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவற்றை அகற்றுமாறு மாநகரசபை பல தடவை நோட்டீஸ் மூலம் உரிமையாளர்களைக் கோரியிருந்தது. ஆனால் பலன் எதுவும் கிடைக்கவில்லை.

இதை அடுத்தே அக் கட்டடங்களை அகற்றும் வேலைகளை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக மாநகரசபை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# கம்பியூட்டர் இருந்தும் அந்த வசதி இன்னும் இல்லை

யாழ்ப்பாணம், பெப் 28

யாழ், அரசாங்க செயலகத்துக்கு கம்பியூட்டர் வசதி கிடைத்தும் ஒய்வூதிய, சம்பளப் பட்டியல்கள் கொழும்பில் இருந்துதான் கொண்டு வரப்படவேண்டும்.

அரசாங்க செயலகத்துக்கு கடந்த வாரம் கம்பியூட்டர் கருவி ஒன்று வந்து சேர்ந்தது. இந்தக் கம்பியூட்டர் மூலம் புனர்வாழ்வு சம்பந்தப்பட்ட வேலைகள் தான் செய்ய முடியும். ஒய்வூதிய, சம்பளம் சம்பந்தப்பட்ட வேலைகளை இந்தக் கம்பியூட்டர் மூலம் செய்ய முடியாது.

மேலும் ஒரு கம்பியூட்டரைப் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-3)

## இரணை மடுத்திட்டத்தின் கீழ் 4,500 ஏக்கருக்கு நீர் வழங்கப்படவுள்ளது

கிளிநொச்சி இரணைமடு நீர்ப்பாசன திட்டத்தின் கீழ் எதிர்வரும் சிறுபோக நெற்பயிர் செய்கைக்கு 4, 500 ஏக்கர் வயல் நிலங்களுக்கு நீர் வழங்கப்பட உள்ளது.

ஒரு ஏக்கர் வயல் உள்ளவர்களுக்கு அரை ஏக்கரும், ஒரு ஏக்கருக்கு மேல் வயல் உள்ளவர்களுக்கு முக்கால் ஏக்கர் விதமும் நீர் வழங்கப்படும்.

தற்போது இரணைமடு குளத்தில் 22அடி தண்ணீர் உள்ளது. இது சிறுபோக பயிர்ச் செய்கைக்காக ஏப்ரல் 1ஆம் திகதி திறந்து விடப்படும் என கிளிநொச்சி நீர்ப்பாசன திணைக்கள தொழில் நுட்ப உத்தியோகஸ்தர் திரு விஸ்ணு காந்தன் உதயனுக்கு தெரிவித்தார், (இ-79)

## நெல் விலை

முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடுநெல்லின்விலை மூடை ஒன்று 550 ரூபாவாக உள்ளது. புதுக் குடியிருப்பு, கைவேலி, மருதமடு, கெப்பாவில், உடையார் கட்டு இடைக்கட்டு, விசுவமடு கற்சிலைமடு, குமுழமுனை, தண்ணீர் முறிப்பு ஆகிய பகுதிகளில் மும்முரமாக அறுவடை நடைபெறுகிறது.

கூட்டுறவுச் சங்கங்களும், நெல் சந்தைப்படுத்தும் சபையும் தனியார் துறையினரும் நெல் கொள்வனவு செய்து வருகிறார்கள். (இ)

## வாசகர் திருமுகம்

### கஷ்டப்பிரதேச நிவாரணம்

வவுனியாக் கச்சேரியில் வேலை செய்யும் 95 சதவீதமான ஊழியர்கள் கஷ்டப் பிரதேச நிவாரணத்தை எடுத்துள்ளனர். ஆனால் இந்தக் கொடுப்பனவுகள் உள்நாட்டு வியாபாரக்கிளை, புள்ளி விபரப் பகுதி ஆகியவற்றைச் சேர்ந்த ஊழியர்களுக்கு கிடைக்கவில்லை.

இவர்களுக்கும் கஷ்டப் பிரதேச நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

வவுனியா
த.குலசிங்கம்.

### மருதோடை பஸ்

நெடுங்கேணியில் அமைந்திருக்கும் மருதோடைக்குப் பல மாதங்களாக யாழ்ப்பாணத்திலிருந்து பஸ் சேவை இடம்பெறவில்லை. இதனால் மக்கள் கடுமையான கஷ்டம் அடைந்தனர். எனவே தமக்குக் கோண்டாவில் டிப்போ புதிய பஸ் சேவை ஒன்றை நடாத்த வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தனர்.

ஆனால் இச்சேவையைநடத்துவதற்குக் கோண்டாவில் பஸ் டிப்போ மறுத்துவிட்டது. தம்மிடம் போதிய பஸ்கள் கையிருப்பில் இல்லையென்றும் அதனால் இச் சேவையை நடாத்த முடியாது இருப்பதாகவும் கோண்டாவில் டிப்போ தெரிவித்து உள்ளது.

பொது மக்களின் நன்மையைக் கருத்திற் கொண்டு இந்தப் பஸ் சேவையை ஆரம்பிக்க இ. போ. ச. நடவடிக்கை எடுக்குமா?

சேமமடு
சி. த. சிங்கம்.

## இணைப்பு குழுக்கூட்டம்

முல்லைத்தீவு பெப் 28

முல்லை மாவட்டத்தில் உள்ள அரசாங்க சார்பற்ற உதவி வழங்கும் பொதுஸ்தாபனங்களின் இணைப்புக் குழுக்கூட்டம் முல்லை மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவரும் மாவட்ட வைத்திய அதிகாரியுமான டாக்டர் க. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் மாவட்டத்தின் அத்தியாவசிய தேவைகள் கொக்கிளாய், கருநாட்டுக்கேணி கொக்குத்தொடுவாய் ஆகிய இடங்களில் மீளக்குடியமரச் சென்றவர்களின் முக்கிய தேவைகள் ஆகியன பற்றி ஆராயப்பட்டது.

இணைப்புக்குழுவின் செயலாளராக றெட்பானா ஸ்தாபனத்தின்பிரதிநிதியான திரு. எஸ். புவனேந்திரன் தெரிவு செய்யப்பட்டார். (இ-92)

## கண்டதும் கேட்டதும்

நெருக்கடிகள் மத்தியில் பல்லாண்டு காலமாக வாழ்ந்து வரும் யாழ்ப்பாண மக்களுக்கு யாழ். அரச வைத்தியசாலை மதிப்பிடற்கரிய சேவை ஆற்றி வருகின்றது. டாக்டர்கள் முதலான ஊழியர்கள் சேவை மனப்பான்மையுடன் பணிபுரிகிறார்கள்.

இது பாராட்டுக்குரியது.

ஆனால் அங்கு நடந்த ஒரு நிகழ்ச்சி பற்றியும் இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இளைஞர் ஒருவர் விபத்துக்கு உள்ளானார். மாலை 5.30 மணி அளவில் காலில் இருந்து இரத்தம் சொட்டச் சொட்ட அவர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

ஆனால் அங்கு கடமையில் இருந்த இளம் பெண் டாக்டர் வார்ட்டுக்கு எடுத்துச் செல்ல உத்தரவு வழங்கினார்.

வார்ட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்ட இந்த நோயாளி இரவு 8.00 மணி வரை கவனிக்கப்படவில்லையாம்.

பின்னர் நோயாளியின் சகோதரர் டாக்டரிடம் முறையிட்டார். அப்பொழுது தான் நோயாளியைப் பார்வையிட்ட டாக்டர் ''இவரை யார் வார்ட்டுக்கு அனுப்பியது? மருந்து கட்டிவிட்டு வீடு செல்லலாம்'' என்றார்.

எப்படி இருக்கிறது நிலைமை?

-செய்திலோலன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உடன் தேவை

பிறவுண் வீதி அரசடிவீதி சந்திக்கு அருகாமையில் இருக்கும் ''Golden Sun'' (102, அரசடி வீதி) புத்தகங்களும் பான்சி சாமான்களும் விற்கும் கடைக்கு பெண் விற்பனையாளர் ஒருவர் தேவை.

ஒருமைல் சுற்றாடலுக்குள் வசிப்பவராகவும் A/L படித்தவராக அல்லது வேலையில் அனுபவமுள்ளவராக இருத்தல் வேண்டும். வாரத்தில் ஐந்து நாட்கள் ஒரு நாளைக்கு 8 மணித்தியாலம் வேலை திறமைக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படும்.

கடை உரிமையாளருக்கு அறிமுகம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது காலை 10 — 12 மணிக்கு இடையில் நேரில் வரவும். 09 - 03 - 90 க்கு முன் சந்திக்கவும்.

[2658]

## COULD THIS BE THE CAREER 'BREAK' YOU'VE BEEN WAITING FOR?

An Insurance Company which would be established shortly in Jaffna has Vacancies for:

**Manager**

Possess a pleasing personality and ability to negotiate with Heads of Mercantile and State institutions connected with the insurance.

Possess extensive experience in general administration and personnel management.

Responsibility and initiative are vital. The successful candidate will be required to plan and implement work systems liaise with appropriate authorities and run the operation of the company independently.

Considerable emphasis will be given to personal qualities of applicant such as maturity, initiative, enthusiasm, innovative thinking, good public relations and business acumen.

**Age:** Above 40 years

**Canvassers**

With a proven experience of 5 years in this field and a good command of English language both written and spoken is essential. Should have minimum qualification of G. C. E. (O/L). A desire for field work and possessing riding and driving licence are an advantage.

**General Clerks** (Males / Females)

Educational qualifications and Experience:

G. C. E. (A/L) and pass in 6 subjects in G. C. E. (O/L) Examination with 4 credit passes one of which should be English. one year experience in insurance related clerical work. Duties include filing, handling of other mail, customer inquiries and documentation. Should be able to attend to correspondence independently.

**Age:** 20 to 35 years

**Typist Clerk (English)** — Female

Educational qualifications and Experience:

G. C. E. (A/L) and pass in 6 subjects in G.C.E (O/L) Examination with 4 credit passes one of which should be English. Three (3) years experience as an English Typist in a reputed firm is essential. Knowledge in manupulating Electric / Electronic Typewriters is an advantage. Duties include providing administrative support such as typing, filing, handling incoming / outgoing mails, maintaining registers and any other clerical related works.

**Age:** 20 to 35 years

Remuneration and Perquisites for above posts are Generous, Commensurate with Qualifications and Experience. Please Apply in writing on or before 15th march 1990 with all relevant details and marking the post applied for on top left corner of the envelope to:

The Advertiser
C/O UTHAYAN - 102

[C-3403]

நிக்கரகுவா அரசியல்

# ஒற்றேகாவின் தோல்வியை அடுத்து கொன்றா கிளர்ச்சிக்குழு கலைப்பு!

### அமெரிக்கா நடவடிக்கை

மனாகுவா பெப். 27

நிக்கரகுவாவின் புதிய ஜனாதிபதி திருமதி வயலெற்றா ஷாமொறாவை தோற்றுப்போன முன்னாள் ஜனாதிபதி டானியல் ஒற்றேகா, நேற்று சந்தித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் ஏற்பட்ட தோல்வியை ஒப்புக்கொண்ட பன்னிரண்டு மணி நேரத்தின் பின்னர் திரு. ஒற்றேகா, புதிய ஜனாதிபதி திருமதி ஷிமாறொவின் இல்லத்திற்குச் சென்றார்.

புதிய அரசின் சகல நடவடிக்கைகளுக்கும் பூரண ஒத்துழைப்புத் தருவதைத் தெரிவிக்கவே புதிய ஜனாதிபதியின் வீட்டுக்கு வந்ததாக திரு. ஒற்றேகா தெரிவித்தார்.

புதிய ஜனாதிபதி திருமதி ஷாமொறாவுக்கு உலகத் தலைவர்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

இதனிடையில் ஒற்றோகா அரசைக் கவிழ்க்க அமெரிக்க அரசு உருவாக்கிய கொன்றா கிளர்ச்சி அமைப்பைக் கலைக்க அமெரிக்கா நடவடிக்கை எடுத்துள்ளது.

கொன்றா அமைப்புக்கு அமெரிக்கா முதலில் ஆயுத உதவிகளை வழங்கி வந்தது. இப்போது மனிதாபிமான உதவிகளை மட்டுமே வழங்கி வருகிறது. இந்த உதவியும் பெப்ரவரி மாதத்துடன் முடிவடைகிறது.

ஆகவே கொன்றா கிளர்ச்சிக்காரர்களை சிவிலியன் வாழ்வுக்கு திரும்பவைக்கும் முயற்சிகளை அமெசிக்கா மேற்கொண்டுள்ளது.

இடதுசாரிஒற்றேகா ஆட்சி இருந்தபோது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளை நீக்குவதற்கும் அமெரிக்கா நடவடிக்கை எடுத்துள்து

ஒற்றேகா அதிகாரங்களை சுமுகமான முறையில் புதிய ஜனாதிபதியிடம் கையளிப்பதற்கான நடவடிக்கைகளை அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிஜிம்மி காட்டர் மனகுவாவில் தங்கி நின்று கவனித்து வருகிறார். (எ

தென்மயிலை ஓய்வு பெற்ற ஆசிரியர்
உயர்திரு
## ஆறுமுகம் இராமலிங்கம்
அவர்களின்
## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 23-09-1920
உதிர்வு: 20-02-1988
திதி: 28—02—1990

அத்தனாய் அன்பு பாச்சி ஆருயிர் தன்னை ஈந்து
வித்தகனாய் வாழ்ந்த அப்பா விமலனின் அடியை
சேர்ந்து எத்தனை நாளானாலும் எழிலுரு நின்திருக்
கோலம் எங்கள் புத்தியில் நிறைந்த தன்றே
புனிதராய் நாம் வாழ்கின்றோம்.

மனைவி, புத்திரர், மருமகர், பேரர்.

தென்மயிலை,
தெல்லிப்பழை.

[2674]


# நீர்விநியோகம் உங்களுக்கு ஒரு பிரச்சினையா? இன்றே தீர்வு காண சிங்கர்

## பிறஷ் இல்லாத மின்சார நீரிறைக்கும் இயந்திரம்

கிணற்றில் அல்லது உயர நீர்த்தாங்கியில் இருந்து நீரைப் பெறும் நீங்கள் அமுக்கப் பிரச்சினைகளை எதிர்நோக்கினால் சிங்கரின் பிறஷ் இல்லாத மின்சார நீரிறைக்கும் இயந்திரம் ஒன்றை நாடித் தீர்வு காணுங்கள்.

சிங்கரிடம் பலவகையான பிறஷ் இல்லா மின்சார நீரிறைக்கும் இயந்திரங்கள் உள்ளன. விரும்பியதைத் தேர்ந்தெடுத்துப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வையுங்கள்.

- அதிகபட்ச உறிஞ்சு திறன் 1400 கலன்/மணி முதல் 4500 கலன்/மணி
- அதிகபட்ச உறிஞ்சு ஆழம் 25 அடி. (கிணறு மேலும் ஆழமெனின் ஆழ் கிணறு உபகரணங்கள் ரூ. 900/-க்கு உண்டு.)
- மொத்த வீச்சு அளவு 65 அடி.

மொடல் ஈ.பி.எம். 10 1''×1'' ரூ. 4,390/-
ஈ.பி. 15 1½''×1½'' ரூ. 5,990/-
ஈ.பி. 20 2''×2'' ரூ. 7,290/-




விவசாயப் பிரிவு
சிங்கர்*
மாசற்ற மேன்மை

சிங்கரின் பராமரிப்புச் சேவை உன்னதமானது. நம்பகமானது. தீவடங்கலானது.



## The Jaffna Education Centre
யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
(சாந்தி சினிமா முன்பாக மேல்மாடியில்)

G.C.E O/L DAY and EVENING CLASSES
G.C.E. A/L Commerce, Arts and Science 90, 91
I. A. B. (London)

★ Spoken English
★ Shorthand Typing

இரு மொழிகளிலும்

01 - 03 - 1990ல் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

(2667)


## நன்றி நவிலல்



### திரு. நடராசா பாலசுந்தரம்
(இளைப்பாறிய சிரேஷ்ட கலால் பரிசோதகர்)

திரு. நடராசா பாலசுந்தரம் (இளைப்பாறிய சிரேஷ்ட கலால் பரிசோதகர்) 31-01-90 அன்று சவூதி அரேபியாவில் காலமானார். அன்னார் குடியிருப்பு வவுனியாவைச் சேர்ந்த காலஞ்சென்ற நடராசா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், இந்திராணி (இளைப்பாறிய வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியை) யின் அன்புக் கணவரும் பாலேந்திரா, வானதி, பாரதி, சத்தியேந்திரா ஆகியோரின் அன்புத்தந்தையும், திருமதி சோ. பத்மாவதி, திருமதி க. ராசமலர், திரு. பாலநாதன், திருமதி சி. யோகராணி, திரு. சிவராசா, திரு. செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சோமசுந்தரம், கனகசபாபதி, சிறீதரன், திலகநாயகி, நிர்மலா, கலா, கனகசபை, காலஞ்சென்ற குமாரசாமி, காலஞ்சென்ற இரத்தினசிங்கம், கேதுராஜா, தர்மலிங்கம், புஷ்பராணி, அழகுராணி, செல்வராணி, ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 16-02-90 அன்று கோயம்புத்தூரில் நடைபெற்றது. இவரது மறைவுச் செய்தியை கேட்டு இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

தகவல்:-
செ. கனகசபாபதி
15/10, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

[11882]

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 22 - 12 - 1965

★●★●★●

மண்ணிற்காக: 28 - 02 - 1987

### ★ நெல்சன் ★
[கணபதிப்பிள்ளை பாலக்குமார்]

அன்னை மடியினிலே அறுபத்தைஞ்சில் பாலனாகி
ஆராத ஊனினால் எழுபத்தைந்தில் குமரனாகி,
'பாலகுமார்' என்ற பெயரை பாங்காக அமைந்தபோது
''நெல்சன்'' எனும் பெயரை நேசமாக வைத்துக்
கொண்டோம். பாவியாக நின்ற பாலா பாரில்
துயர் கண்ட போது, வேங்கையாக விழித்தெழுந்து
விடிவிற்கொரு குரல் கொடுத்தான்!
அரக்கர் அட்டகாசம் கட்டுவனில் கண்ட போது
மிடுக்காக ''நெல்சன்'' துப்பாக்கி தூக்கி நின்றான்
அடுக்காத பாவிகள் அவன் உயிரைப் பறித்தாலும்
துடிப்பாக நிற்கும் அவன் புகழுடலை பறிக்கலாமா?
'நெல்சா' உன் மறைவு மூன்றாண்டாய் போனாலும்
'பாலா' உன் நினைவு பல ஆண்டாய் போகுதடா!
உன் ஆத்மா சாந்தி பெற எம் இதய அஞ்சலிகள்!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இவ்வண்ணம்:
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

சிறுவிளான்,
இளவாலை.

(2654)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளாய் சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலைய
# இறுதிப் பரீட்சை முடிவு விபரம்— 1990

**விசேட சித்தி:- (Merit)**

1. செல்வி செ. ஜெகதாதேவி — கரவெட்டி
2. திருமதி செ. இராஜேஸ்வரி — கரவெட்டி
3. செல்வி சி. கலாராணி — மூளாய்

**சாதாரண சித்தி:- (Pass)**

1. சுளிபுரம்:-
   1. செல்வி வி. நளினி 2. செல்வி சு. சுமதி
   3. செல்வி எ. தவமணி 4. செல்வி ந. வாசுகி
   5. செல்வி வி. பிறேமாவதி
   6. செல்வி ஆர். இராஜேஸ்வரி
2. மூளாய்:-
   1. செல்வி எல். பவானி
   2. செல்வி கே. சிவனேஸ்வரி
   3. செல்வி து. செல்வராணி
   4. திருமதி யோ. மகாராணி
   5. செல்வி சு. இராஜமலர்
   6. செல்வி ரி. வேதவல்லி
3. காரைநகர்:
   1. செல்வி வி. பத்மாவதி
   2. செல்வி ஜி. தங்கரத்தினம்
   3. செல்வி சு. சூரியகுமாரி
   4. செல்வி என். தர்மபூபதி
   5. செல்வி ந. புனிதராணி
   6. திருமதி எஸ். ஜெயலக்ஷ்மி
   7. செல்வி சி. உமாதேவி
   8. திருமதி க. புவனேஸ்வரி
   9. செல்வி கு. அருள்சோதி
   10. செல்வி க. தவமலர்
   11. செல்வி வே. சர்வேஸ்வரி
   12. செல்வி செ. சசிகலா
   13. செல்வி கு. குலரஞ்சனி
   14. செல்வி த. லோகேஸ்வரி
   15. செல்வி க. விஜயகுமாரி
   16. செல்வி சோ. சுசீலா
   17. செல்வி செ. தவமணி
   18. செல்வி அ. புஸ்பராணி
   19. செல்வி எல். சிவஞானவல்லி
   20. செல்வி ச. நிர்மலாதேவி
   21. செல்வி ப. குலமணி
4. சண்டிலிப்பாய்:
   1. செல்வி கே. தயாபரி
5. மாதகல்:
   1. செல்வி எஸ். வசந்தராணி
6. தொல்புரம்:
   1. செல்வி வி. திலகவதி
7. பொன்னாலை:
   1. திருமதி ச. செல்வரத்தினம்
   2. செல்வி க. வளர்மதி
8. நெல்லியான்
   1. செல்வி ஆர். இந்துமதி
9. வட்டுக்கோட்டை:
   1. செல்வி ஆர். ஜெகதா
   2. செல்வி எ. பத்மாவதி
10. பருத்தித்துறை
    1. செல்வி என். சகுந்தலாதேவி
    2. செல்வி எம். புளோறா
    3. செல்வி என். அன்ரூட்ஸ் கிறிஸ்ரியானா
    4. செல்வி என். சுலோஜனா
    5. செல்வி எஸ். யோகராணி
    6. செல்வி வி. திலகவதி
    7. செல்வி ரி. ஜெயசிறிலக்ஷ்மி
    8. செல்வி எஸ். புளோவரீடா
    9. செல்வி எஸ். கோகிலா
    10. செல்வி எ. கலாநிதி
11. வல்வெட்டித்துறை:
    1. செல்வி பி. லலிதகுமாரி
    2. செல்வி வி. காந்திமலர்
    3. செல்வி எஸ். யோகராணி
    4. செல்வி யே. வனிதா
    5. செல்வி எஸ். வதனராணி
12. தொண்டமனாறு
    1. செல்வி எஸ். தேவகி
    2. செல்வி ஆர். உதயலக்ஷ்மி
13. குடத்தனை:
    1. செல்வி மேரி. டொலறோஸி
14. அல்வாய்:
    1. செல்வி ரி. சுசீலகுமாரி
15. கரவெட்டி
    1. செல்வி ரி. இந்துமலர்
    2. செல்வி எஸ் மங்களேஸ்வரி
    3. செல்வி கே. நேசமலர்
    4. செல்வி கே. சுமதி
    5. செல்வி எஸ். ஞானகௌரி
16. கற்குளம்:
    1. செல்வி இ. றெபேக்கா சுலோஜனா
17. நாவற்கலட்டி:
    1. செல்வி எஸ். சாமினி
18. அத்தியடி:
    1. செல்வி பி. கமலாதேவி
19. வரணி:
    1. செல்வி எம். லலிதா
    2. செல்வி. கே. இந்துமதி
20. சாவகச்சேரி:
    1. செல்வி கே. யோகேஸ்வரி
21. உடுப்பிட்டி:
    1. செல்வி ஆர். நந்தினி
22. ஊர்காவற்றுறை:
    1. செல்வி யோ. இமாகுலேற்
    2. செல்வி பி. யோசேப்பின் இராஜேஸ்வரி
    3. செல்வி கோ. வதனி
    4. திருமதி ஜீ. கருணாதேவி
    5. செல்வி. ரூ. ஆன்கிதா
    6. செல்வி மு. தனேஸ்வரி
23. அனலதிவு:
    1. செல்வி எஸ். சகாயநிர்மலா
24. யோகபுரம்:
    1. செல்வி ந. அமலாம்பிகை
    2. செல்வி சி. மகேஸ்வரி
    3. செல்வி ந. சற்குண ரூபி
    4. செல்வி அ. ஜெயராணி
    5. திருமதி பி. முத்துமலர்
    6. செல்வி நா. லக்ஷ்மி பவானி
    7. செல்வி செ. தமிழ்ச்செல்வி
    8. செல்வி த. சாந்தினி
    6. செல்வி நா. திலகவதி
    10. செல்வி எ. புனிதவதி
    11. செல்வி க. சுரேன்
25. வவுனிக்குளம்:
    1. செல்வி சொ. பஞ்சசௌரி
    2. செல்வி வை. தனலக்ஷ்மி
    3. செல்வி செ. வசந்தராணி
26. கரும்புள்ளியான்:
    1. செல்வி பெ. லீலாவதி
27. துணுக்காய்:
    1. செல்வி க. புஸ்பராணி
    2. செல்வி அ. ஜீவநந்தினி
    3. செல்வி சு. மங்கையற்கரசி
28. மருதங்கேணி:
    1. செல்வி ஜெ. மேரி ஹரட்ஸ் அமலநாயகி
    2. செல்வி வி. அருட்செல்வி
    3. செல்வி எம். நிர்மலாதேவி
    4. செல்வி என். புஸ்பலீலா
    5. செல்வி ஆர். ரேணுகாதேவி
    6. திருமதி வி. பராசக்தி
    7. திருமதி ஆர். புவனேஸ்வரி
    8. செல்வி எஸ். நந்தகுமாரி

● மேல் குறிப்பிட்ட ஆசிரியர்களுக்கு மார்ச்மாதம் 5 ஆம் திகதி சான்றிதழ் யாழ்ப்பாணம் தொழில் நுட்ப கல்லூரி வட்டுக்கோட்டையில் பிற்பகல் 2 மணிக்கு வழங்கப்படும் இதில் பங்குபற்றுவதற்கு யுனிசெவ் ஸ்தாபன பிரதிநிதிகள் வருகை தர உள்ளனர்.

(2668)


# முக்கிய அறிவித்தல்

எம்மிடம் சவூதி, குவைற் நாடுகளுக்கு செல்வதற்கு கடவுச்சீட்டு தந்தவர்கள் அனைவருக்கும் 7, 15 - 3 - 90 இல் பயணம் மேற்கொள்ள உள்ளதால் உடன் எமது காரியாலயத்துடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

நன்றி

**T. V TRAVELS & TOURIST**

[Front of Railway Station]
Brown Road
KOKUVIL

[சி-3933]


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## வேலுப்பிள்ளை முருகுப்பிள்ளை

தோற்றம்: 13 - 4 - 1917　　மறைவு: 29 - 1 - 1990

அன்பின் இருப்பிடமாய் பண்பின் உறைவிடமாய் எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து, பொறுப்புணர்ச்சி மிக்க தந்தையாக எம்மை எல்லாம் அன்போடும் பாசத்தோடும் வளர்த்து நல்வழிகாட்டி வாழவைத்து, மாவிட்டபுரம் குமரகோவில் திருப்பணி வேலைகளில் அல்லும் பகலும் கோவில் உயற்சிக்காக அயராது பாடுபட்டுத் திடீரென எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி மீழாத் துயில் கொண்ட அன்புத் தெய்வமே நீங்கள் எம்மைப் பிரிந்து சென்றாலும் உங்கள் பசுமையான நினைவுகள் எங்கள் எல்லோர் நெஞ்சங்களிலும் என்றென்றும் நிலைத்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்:

கருவேலடி லேன்,
கொக்குவில்.

(2679)

## வடக்கு-கிழக்கு...!

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரு. யோகி காரைச் செலுத்த முன் இருக்கையில் அருகில்-அமைச்சர் அமர்ந்திருந்தார். அமைச்சருடன் அவரது மெய்ப்பாதுகாவலர் சிலரும் வந்திருந்தனர்.

வழிநெடுகிலும் அமைச்சருக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை விடுதலைப் புலிகளே கவனித்தனர். ஆங்காங்கே இலங்கை இராணுவத்தினர் சிலரும், பொலாரும் காணப்பட்டனர்,

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு காரியாலயத்தில் அமைச்சரை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராஜா (மாத்தயா), டாக்டர் அன்ரன் பாலசிங்கம் திருமதி பாலசிங்கம் உட்பட பலர் வரவேற்றனர்.

அங்கு சுமார் 15 நிமிட நேரம் தங்கியிருந்த அமைச்சர் பின்னர் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களோடு அவர்களின் கல்லடி வாசஸ்தலத்துக்குப் புறப்பட்டுச் சென்றார்.

அங்கு விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கும் அமைச்சருக்கும் இடையில் சுமார் நான்கு மணிநேரம் கலந்தாலோசனைகள் இடம்பெற்றன.

இந்தக் கலந்தாலோனைகளின் போது விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவர்களும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மாவட்ட அமைப்பாளர்களும் பங்குபற்றியதாகத் தெரியவந்தது.

இந்தியப் படையினர் வெளியேறிய பின்னர் மட்டக்களப்பில் நிலவும் அமைதி, பொது வாழ்வு நிலைமை குறித்து நேற்றைய சந்திப்பின் போது அமைச்சர். திருப்தி தெரிவித்ததாகத் தெரியவந்தது.

(உ-21)

## பிரபாவைச்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வல்லரசானஇந்தியா 1971இல் பங்களாதேஷ் யுத்தத்தின் போது அப்போதைய கிழக்குப் பாகிஸ்தானில் நிலைகொண்டிருந்த 80 ஆயிரம் பாகிஸ்தான் துருப்புக்களைச் சில தினங்களில் படுதோல்வி அடையச் செய்திருந்தது.

அதே இராணுவம் கடந்த இரண்டு வருடங்களாக யுத்தம் நடத்தியும் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் தோல்வி கண்டது வரலாற்றில் இடம் பெறும் ஒரு பெரும் நிகழ்வாகும்.

அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கைக்குப் படைகளை அனுப்பும் முட்டாள்தனமான முடிவை எடுத்திருந்தார். இந்திய இராணுவத்துக்குக் கெட்ட பெயர் வருவதற்கு அவரின் நடவடிக்கையே காரணம் ஆகும்.

தென்வியட்நாம் மக்கள் அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராகச் சுமார் 8 வருட காலம் போராடினர். அவர்களின் போராட்டத்துக்குச் சீனாவும் வட வியட்நாம் ஊடாக சோவியத் யூனியனும் உதவிகளை வழங்கி வந்தன.

ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் எந்த ஒரு நாட்டின் உதவியும் இன்றிப் போராட்டம் நடத்தி உள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் உலகிலேயே சிறந்த போராட்டவீரன் என்பதை இது எடுத்துககாட்டுகிறது.

இப்படி திரு. நெடுமாறன் கூறினார். (இ)

## Holy Spirit

Thou who makes me see Fverything and shows me the way to reach my Ideal. Thou who gives me the devine gift to forgive and forget the wrong done to me and who in all instances with me in life. I thank thee for every thing and confirm that I never want to be seperated from thee no matter how great the material desire may be. I want to be with you and My Loved ones in your Perpetual Glory.

**Ratnakanthy**

(2678)

## பனை அபிவிருத்தி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரே மாதிரியான சீதோஷ்ண நிலையில் வளரக்கூடியன என்பது மாமுனையில் உள்ள ஆய்வுப் பண்ணையில் நிருபிக்கப்பட்டுள்ளதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப் படுகிறது. (உ)


**KALALAYAAH**
**An Exhibition**
**on**

Iced Cakes　Paper & Cloth Flowers
Structurecakes　Glass & Fabric Painting
Handicrafts　Hair-Styles
Dress Making　And Kolams

Venue: Victoria Road, Jaffna.
Date: 2nd, 3rd, & 4th of March 90
Time: 9.00 a.m. to 5.00 p.m.

Entrance Fee Rs. 5/-
Old Students Are cordially invited

(C-3937)


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 5 - 2 - 1966

இறைவன் அடியில்: 28 - 2 - 1988

## செல்வன் துரைசிங்கம் சுதிகரன் (சுதி)

அன்பு மகனே சுதி! உன்னை நினைக்கும் போதெல்லாம் உச்சிவெடித்து உடல் கருகுதையா! குடும்பத்திற்கோர் தலைவனாகவும் எமக்கெல்லாம் ஒரு வழிகாட்டியாகவும் இருந்த நீ எங்கள் எல்லோரையும் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு நீ மீளாத்துயில் கொண்டு ஈராண்டு காலம் ஓடி மறைந்தாலும் மாறாது மறையாது ஒளிவீசும் உன் உருவம் எம்மை விட்டு அகலாது. உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

உமது பிரிவால் வாடும்,
அப்பா, அம்மா' அண்ணா, தம்பிமார்,
தங்கைமார், மாமா, மாமி, சித்திமார்,
சித்தப்பாமார், அம்மம்மா
மற்றும் உறவினர்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

(3932)

# 31ம் நாள் கண்ணீர் அஞ்சலி

உதயம் 04.06.1919

அஸ்தமனம் 28.01.1990



## Dr. அ. தங்கராஜா (R. M .P)

கொக்குவில் மேற்கு

அன்புத் தகப்பனாக அருமைத் தாயாக எம்மை உயிரினும் மேலாக வளர்த்து ஆளாக்கி இம் மண்ணிலே இனிது வாழ வழி காட்டி எம்மை இடையில் தவிக்க விட்டு இறைவனடி சேர்ந்த அன்புத் தந்தையின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்

(11922)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடம் வர்ண நிழற்படப்பிடிக்க
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள்
போட்டோ அல்பங்கள் இலவசம்
மேலதிக சிறப்புகளுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

28 - 02 - 1990 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/50 நெக்கட்டில் (Processing) செய்தல் இலவசம்
★ விற்பனை வர்ண நிழற்படச் சுருள்கள்
Kodak, Fuiji Konica
Tudor Fort B/W
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

## மீண்டும் யாழ் நகரில் பனை அபி.சபை பணிமனை

கொழும்பு, பெப். 28

பனை அபிவிருத்திச் சபையின் தலைமைக் காரியாலயம் மீண்டும் அடுத்தவாரம் முதல் யாழ், வீடமைப்பு செயலகத்தில் இயங்கவுள்ளது.

அதே நேரம், இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டு தற்போது இயங்காமல் இருக்கும் இச் சபையின் ''திக்கம் பல் தொழில் தொகுப்பும்'' அதனுடன் இணைந்த சாராய வடிசாலையும் புனரமைக்கப்பட்டு மீண்டும் இயங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

பனை அபிருத்திச் சபைத் தலைவர் திரு.கே.நடராஜா இத்தகவல்களைத் தெரிவித்தார். (உ

## தமிழகத்தில் பெரும்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகளையும் அரசியல் வாதிகளையும் எச்சரிக்கவேண்டும்.

போராளிகளின் இப்படிப் பட்ட செயலுக்குப் பின்னணி 'யார்' என்பதை தமிழக முதல்வரும் அரசும் அறிவார்கள்.

விடுதலைப் புலிகளது செல்வாக்கு பற்றிய யதார்த்த நிலையை உணர்ந்து தமிழக முதலமைச்சர் வாதங்களை முன்வைத்தார்.

இந்திய அமைதிப்படை என்ற தந்தையும், 'றோ' என்ற இந்திய உளவுப் படை என்ற தாயும் சேர்ந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராக 'தத்து' எடுத்த பொம்மை அரசின் முதல்வர் வரதராஜப் பெருமாள், தமிழக முதல்வரின் நிலைப்பாட்டைக் குறை கூறி, தான் ஏற்கனவே கூறியுள்ளதில் இருந்து பின்வாங்கி 'குத்துக்கரணம்' அடித்துள்ளார்.

அவரை இயக்கி வைப்பவர் யாரோ என்று கூறியுள்ளார் தமிழக முதல்வர்.

யாரோ என்று கேட்கவே வேண்டாம். அது நாடறிந்த உண்மை.

இந்த அதிகாரிகளை தமிழ் நாட்டில் சட்டம் - ஒழுங்கு சீர்குலைவை ஏற்படுத்துவதற்காக உடனடியாகக் கைது செய்து நடவடிக்கை எடுக்க தமிழக அரசு முன்வர வேண்டும்.

உள்நாட்டு பாதுகாப்புச் சட்டத்தைப் பாவித்து திரு விளையாடல் நடத்தி, 'தமிழ் நாட்டை கலவரப்பகுதியாக்க முயலும் அதிகாரிகள் அவர்கள் எவ்வளவு பெரிய நிலையில் இருப்பினும் தமிழ்நாட்டில் சட்டம் - ஒழுங்கு காப்பாற்றும் நிலை குறித்து தயவு தாட்சண்யம்இல்லாமல் இரும்புக் கரம் கொண்டு அடக்க அவசரமாக முன்வர வேண்டும்.

—இப்படி திரு. வீரமணி அறிக்கையில் கூறியிருக்கிறார்.

## அ. தி. மு. க...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மரிப்பை குலைக்கத் தூண்டியதாகவே இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவர்களுடைய அறிக்கைகளை வெளியிட்ட தினமலர் உட்பட்ட சில பத்திரிகைகள் மீதும் வழக்கு தொடரப்படும் என்றும் அரசு தரப்பில் கூறப்பட்டது. (ஒ-எ)

## வசதிக் கட்டண,..

கோரியிருந்தது.

இந்த விபரங்கள் அனைத்தும் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதனை அடுத்து தற்போது வசதிக்கட்டணஆசிரியர்களை நிரந்தரமாக்குவது என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த டிசம்பர் மாதம் 31ஆம் திகதியன்று ஒருவருட சேவையைப் பூர்த்திசெய்த சகல வசதிக்கட்டண ஆசிரியர்களும் நிரந்தரமாக்கப்படுவார்கள். (உ-9)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சின்னத்துரை கேதீஸ்வரன்

(காண்டீபன் - அரவிந்தன்)

மலர்வு: 05 - 08 - 69

உதிர்வு: 10 - 02 - 89

திதி: 01 - 03 - 90

அலைகட லெழுந்திட ஆர்ப்பரித்ததோ
வானிடி இடித்திடவைய மதிர்ந்ததோ
நிலை கொளாதிந்த நானிலம் மன்னார்
செய்தவப் பேறும் அடுத்து மடிந்ததோ
கலை திகழ் உளமது காவியமானதோ
காண்டீபன் திருமுகம் எங்கே அன்று
மலை யெனு மண்ணன் பொபியைத் தொடர
மண்ணிதை விட்ட மாய மதென்ன?

பெற்றோர், சகோதரர்கள்.

(மன்னார் உயிலங்குளம்)
அரசடி வீதி,
கந்தர்மடம். (11923)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 28 - 02 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது:

## நிக்கரகுவாவின் புதிய அதிபர் ஏப்ரலில் பதவி ஏற்பார்!

மனாகுவா, பெப்28

நிக்கரகுவாவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள திருமதி வயலெற்றா ஷாமொறொ வருகிற ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி பதவி ஏற்கவிருக்கிறார்.



வயலெற்றா ஷாமொறொ

நிக்கரகுவாவின் முன்னாள் சர்வாதிகாரியான அனஸ்டாஸியோ சொமோஸாவின் அரசியல் எதிரியாக விளங்கியவர் திரு. பெட்ரோ ஷாமொறொ

சர்வாதிகாரி சொமோஸாவின் ஆட்சியில் திரு. பெட்ரோ ஷாமொறொ கொல்லப்பட்டார். அவரின் மனைவிதான் நிக்கரகுவாவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டவர்.

டானியல் ஒற்றேஹாவை தேர்தலில் தோற்கடித்ததன் மூலம் திருமதி ஷாமொறொ ஜனாதிபதியாகத் தெரிவானார் என்பது தெரிந்ததே. (ஒஎ)

(மற்றொரு செய்தி 4ஆம் பக்கத்தில்)

## புனரமைப்பு வேலைகளை அமெ. தூதுவர் பார்வையிட்டார்

வவுனியா, பெப் 28

வவுனியா மாவட்டத்தின் புனரமைப்பு, புனர்வாழ்வு நடவடிக்கைகளின் கீழ் ஐக்கிய நாடுகளின் சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் வேலைகளை இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதுவர் திரு. மரியன் கிரீக்மூர் தலைமையிலான குழு ஒன்று கடந்த திங்களன்று பார்வையிட்டது.

இக் குழுவினர் இராசேந்திரன் குளம்,சூடுவெந்தபுலவு பாவற்குளம், சின்னத்தம்பனை, கந்தசாமிநகர் போன்ற இடங்களுக்குச் சென்று பார்வையிட்டதுடன் பாதிக்கப்பட்டவர்களுடன் கலந்துரையாடி கருத்துக்களையும் கேட்டறிந்தார்கள்.

அமெரிக்கத் தூதுவருடன் வந்திருந்த தூதரக அதிகாரிகள் மற்றும் சர்வதேச அபிவிருத்தி உதவி நிறுவனத்தின் பிரமுகர்கள் மற்றும் புனர்வாழ்வுபுனர்நிர்மாண அமைச்சின் மேலதிக செயலர்ளா திரு. கே. சி. லோகேஸ்வரன் புனர் வாழ்வு திட்டப் பணிப்பாளர் திரு. த. லங்காநேசன் புனர் வாழ்வு நெறிப்படுத்தல் குழுவின் உறுப்பினர் திரு. தயாபரன் ஆகியோர் அடங்கிய குழுவினரை வவுனியா அரசாங்க அதிபர் திரு. செ. பத்மநாதன் வவுனியா திட்டப் பணிப்பாளர் திரு. எஸ் லங்கராஜன் தலைமையிலான அதிகாரிகள் கிராமங்களுக்கு அழைத்துச் சென்றார்கள். (ஒ-164)

## தடங்கலுக்கு வருந்துகிறோம் . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் தோல்விஅடையாது.

1983ஆம் ஆண்டு இலங்கையில் இனக்கலவரம் ஏற்பட்டது.

அதன்பின்னர் இலங்கைத் தமிழ்ப் போராளிக் குழுக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தப் பலதடவை முயற்சித்தேன். தமிழக அரசியல் நிலை அந்த ஒற்றுமை முயற்சியைப் பாதித்தது.

தமிழ்க் குழுக்களிடையே பிளவுகளை ஏற்படுத்துவதில் சில நிறுவனங்களும் வெற்றி கண்டன. இவற்றால் என் முயற்சிகள் வீணாகின.

பிரதமர் வி. பி. சிங்கின் வேண்டுகோளின்மீது தமிழர் குழுக்களை ஒற்றுமைப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டேன்.

பேச்சுக்களின்போது வடக்கு கிழக்கு மாகாணசபையைக் கலைக்க முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் முன்வந்தால் ஜனநாயக நடைமுறைக்கு வருவதாக விடுதலைப் புலிகள் கூறியதை ஈரோஸ், ரெலோ, புளொட் ஆகியவை ஏற்றுக்கொண்டன அத்துடன் அதனை அமுலாக்குவதற்குச் சில ஆலோசனைகளையும் அவை தெரிவித்தன.

இந்த விஷயத்தில் ஈ. பி. ஆர். எல். எவ். எடுக்கும் முடிவின்படியே நடக்கப் போவதாக ஈ. என். டி. எல். எவ். தெரிவித்தது.

சபையைக் கலைத்து புதிய தேர்தலை வைப்பது புதிதாகச் சண்டை ஏற்படுவதற்கு வழிவகுக்கும் என்று கூறிய ஈ, பி. ஆர். எல். எவ். இயக்கம் தற்போதுள்ள சபையில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு இடமளிக்கத் தயார் என்றும் சொன்னது.

இப்போது 19 புதிய நிபந்தனைகளை ஈ. பி. ஆர். எல். எப். இயக்கம் முன்வைத்துள்ளது.

ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கமும் விடுதலைப் புலிகள் இயக்கமும் தங்கள் நிலைப்பாடுகளையும் விவாதங்களையும் தொடர்ந்து கூறிக்கொண்டு வந்தால் குழுக்களிடையே நான் நடத்தும் சமரசப் பேச்சுக்களைத் தொடரமுடியாது.

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களான பிரபாகரன், மாத்தையா ஆகியோரின் கருத்துக்களை அறிந்து அதன்பின்னரே அவற்றை என்னிடம் அன்ரன் பாலசிங்கம், யோகி போன்றவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

தேவைப்பட்டால் பிரபாகரனையும் அழைத்துப் பேச எனக்கு எந்தவித தயக்கமும் இல்லை.

நான் குழுக்களுடன் பேச்சு நடத்திய காலத்தில் வடக்கு-கிழக்குப் பகுதியில் உயிரிழப்புக்கள் ஓரளவு குறைந்துள்ளன.

கேள்வி: ஒருதரப்பினர்கூறுவதை மற்றத் தரப்பினருக்கு எடுத்துச் சொல்வதோடு நின்றுவிடாமல் நீங்கள் விரும்புவதையும் போராளிக் குழுக்களிடம் எடுத்துக் கூறவேண்டும் என்று சில போராளிக் குழுக்கள் கூறியுள்ளனரே?

கருணாநிதி: எந்த ஒரு குழுவின்மீதும் நான் எந்தக் கருத்தையும் திணிக்க விரும்பவில்லை. இதை ஏற்கனவே நான் கூறிவிட்டேன். பேச்சுவார்த்தையில் வெற்றி தோல்வி அல்ல முக்கியம் தமிழ்மக்கள் உயிர் காப்பாற்றப்படவேண்டும்.

ராஜீவ்காந்தி அரசு இருந்த சமயமே அமைதிப்படை தாயகம் திரும்பத் தொடங்கிவிட்டது. அந்த நிலையில் அவர்கள் தொடர்ந்து இரும்பிவருவதைத் தவிர வேறு வழியில்லை.

—இப்படி கலைஞர் கருணாநிதி கூறினார். (உ-6)

## நோயாளருக்கு நெடுமாறன் ஆறுதல்!

யாழ்ப்பாணம், பெப். 28

தமிழ் நாட்டுப் பிரமுகரான திரு. பி. நெடுமாறன் நேற்று மாலை யாழ், ஆஸ்பத்திரிக்குச்சென்று பார்வையிட்டார்.

இராணுவ நடவடிக்கைகளின் போது பாதிக்கப்பட்ட நோயாளர்களையும் ஏனைய நோயாளர்களையும் அவர் சந்தித்துப் பேசினார். அவர்களுக்கு தமது அனுதாபத்தையும் தெரிவித்தார்.

வைத்திய அதிகாரிகளுடனும் அவர் கலந்துரையாடினார். (ஒ-10)

## வங்கிகளில் நிவாரணம்

இரண்டாம் கட்ட மீளக் குடியமர்தல் நிவாரணம் திருநெல்வேலி கிழக்கு (ஜே/ 55) பிரிவில் உள்ளவர்களுக்கு எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வழங்கப்பட இருக்கிறது.

இலங்கை வங்கியின் ஸ்ரான்லி வீதிக்கிளையில் இக் கொடுப்பனவு வழங்கப்படும்

**சுன்னாகம் மக்களுக்கு**

சுன்னாகம் கிராமசேவையாளர் பிரிவை (ஜே/94) சேர்ந்தவர்களுக்கு இரண்டாம் கட்ட மீளக்குடியமர்தல் நிவாரணம் எதிர்வரும் மூன்றாம் திகதி சனிக்கிழமை வழங்கப்பட இருக்கிறது.

யாழ்- ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளையிலேயே இந்தக் கொடுப்பனவு வழங்கப்படஇருக்கிறது. (ஒ-3)

## ஜெயலலிதாவின் முதுகெலும்பில் முறிவு?

சென்னை, பெப். 28

கார் விபத்தில் சிக்கிய அ. தி. மு. க, பொதுச்செயலாளர் ஜெயலலிதாவின் முதுகெலும்பிலும் முறிவு ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது.

எக்ஸ் - றே பரிசோதனைகளை அடுத்தே இச்சந்தேகம் ஏற்பட்டதாக டாக்டர் கே. சொக்கலிங்கம் தெரிவித்தார். (ஒ-9)

## விபூதித்திருநாள்

குருநகர், பெப். 28

இன்று உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்கள் விபூதித்திருநாளை அனுஷ்டிக்கின்றனர்.

மண்ணில் தோன்றும் மனிதன் வாழ்வு மண்ணிலேயே முடிகிறது என்ற தத்துவதை இத்திருநாள் குறிக்கிறது. (ஒ-51)

## இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், பெப். 28

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நேற்று மினிவானும் சைக்கிளும்மோதி விபத்துக்குள்ளானதில் சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

கோண்டாவிலைச் சேர்ந்த பி. கவீந்திரன் (வயது 28) என்பவரே காயமடைந்தவராவர் (ஒ-10)

## றொனி மீதான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, பெப். 28

முன்னாள் நிதியமைச்சர் றொனி டி மெல் மீதான நம்பிக்கைமோசடி வழக்கின்விசாரணை அடுத்த மாதம் 14 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வழக்கு சம்பந்தமான தஸ்தாவேஜுகளை நீதிமன்றத்திற்குக்கொண்டு வருவது கஷ்டமான காரியம் என்று அரசு தரப்புச் சட்டத்தரணி கூறியதைத் தொடர்ந்து விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

அன்றைய திகதியில் எதிரி தரப்பினர் தாங்கள் பார்க்க வேண்டிய தஸ்தாவேஜுகள் எவை என்பதை நீதிமன்றத்திற்கு அறிவிக்க வேண்டும் என்று கூறப்பட்டது. (எ)

## மரண அறிவித்தல்கள்

### திரு. V. D. அம்பலம்

காரைநகர் ஆலடி பொன்னம்பலம் வீதியை சேர்ந்த (இளைப்பாறிய கிறின்லேஸ் வங்கி உத்தி யோகத்தர்) திரு. V. D. அம்பலம் 26 - 02 - 1990 அன்று காலமானார்.

அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும் பாக்கியவதி, புஸ்பவதி, ரட்ணராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், அரசரட்ணம், செல்வராணி, ஆகியோரின் மாமனாரும், மேவின், கீதாஞ்சலி, அஜித், றூபா ஆகியோரின் பேரனாரும், ராசையா, ராணி, தேவதாசன், காலஞ்சென்ற ராஜகாரி, ஜீவரட்ணம், நல்லையா, தம்பிராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரின் இல்லத்தில் நாளை வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் காரைநகர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
குடும்பத்தினர்

காரைநகர். [2673]

### திரு. சுப்பிரமணியம் சிற்றம்பலம் [தம்பிராசா] இளைப்பாறிய அரச ஊழியர்

யாழ்ப்பாணம் இலக்கம் 36 ஸ்ரான்லிக் கல்லூரி வீதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிற்றம்பலம் சிவபதமடைந்துவிட்டார்.

இவர் காலம்சென்றவர்களான சுப்பிரமணியம் முத்தம்மா ஆகியோரின் ஏக புத்திரனும், காலம் சென்றவர்களான கணபதிப்பிள்ளை - பொன்னம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், சௌபாக்கியவதியின் அன்புக் கணவரும், சௌந்தரகலாநிதி, சௌந்தர கமலாகரன் (U.K), சௌந்தரராஜன் (Dubhai), சௌந்தரராணி (U.K), சௌந்தரஸ்ரீதரன் (Germany) ஆகியோரின் அருமைத் தந்தையும், வதனபாஸ்கரி, வதனி, சித்திரானந்தி, பாலசுப்பிரமணியம் (பாலா மாஸ்டர், ஊரிக்காடு), ஜெகதீஸ்வரன் (U.K), ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயந்தன், ஜெயப்பிரிதா, ஜெயதீபன், செந்தூரன், நித்திக்கா, சக்திகா ஆகியோரின் பேரனும், இளைப்பாறிய கிராம சேவை அலுவலர் க. சண்முகராஜா, இளைப்பாறிய வேலை அதிகாரி (S.W.) V. K. சிவசுந்தரம், முன்னை நாள் C. T. B. பொறியியலாளர் G. V. K. மயில்வாகனம் ஆகியோரினதும் ந. நரேந்திரன், பா. திலகவதி என்போரினதும் மைத்துனரும், காலம்சென்றவர்களான தம்பிமுத்து - இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் பெறாமகனும், நமசிவாயத்தின் மருமகனும், தம்பிமுத்து பத்மநாதனின் உடன்பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 01-03-1990 வியாழக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
மனைவி, மக்கள்

[11883]

### திரு. தம்பு அழகரத்தினம்

அராலி கிழக்கு தம்பு அழகரத்தினம் 27-02-1990 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் ஞானமலரின் அன்புக் கணவரும், சொர்ணம்மா-அமிர்தலிங்கத்தின் மருமகனும், சத்தியபாமா, லிங்கேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுருநாதன் (கட்டிட திணைக்களம்), லிங்கேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலம்சென்ற இரத்தினசிங்கம், விஜயரத்தினம், Dr. தர்மரத்தினம் ஆகியோரின் சகோதரரும், மற்றும் சிவபாக்கியம், சபாரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜனகன், ஜெயந்தன், சுதர்சன், றதீஷன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 28-02-1990 புதன்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் அராலி கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி கிழக்கு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சிவகுருநாதன்

''சக்தி வாசம்''
அராலி கிழக்கு, அராலி. [2687]

### செல்லப்பா இராசரத்தினம்

(இளைப்பாறிய சிறாப்பர்)

நல்லூர் கோவில் வீதியைச்சேர்ந்த செல்லப்பா இராசரத்தினம் 26-2-90 அன்று காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற திருமதி பாக்கியவதி அவர்களின் அன்புக்கணவரும், பத்மாவதி, இராஜலிங்கம் (நியூ லங்கா அலுமேனிய தொழிலகம்) ஜெயவதி, திலகவதி விக்னராஜா, ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற ஜெகந்நாதன் (இளைப்பாறிய சிறாப்பர்) சத்தியபாமா, காலஞ்சென்ற சண்முகநாதன் (இளைப்பாறிய ஏயர்போஸ்) பத்மநாதன் (தோட்டதொழில் மாவட்ட அதிகாரி) மாகிரெட் ஆகியோரின் மாமனுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (28-2-90) புதன்கிழமை பி. ப 5 மணிக்கு பம்பலப்பிட்டிய 32 இல் பெட் றோட்டிலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவிவதலை உற்றார் உறவினர் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
T. சத்தியநாதன்

இல. 50, வைமன் வீதி,
யாழ்ப்பாணம். )11921)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org